**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.107/2015**

**பி.வா.சா.4 – தங்கராஜ்**

**நாள்.14.02.2023**

**1 முதல் 3 , 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் பெரியகுளம் தாலுகா, அம்மாபட்டி கிராமம். வளர்ந்தது மல்லநாயக்கன்பட்டி. நான் 5ம் வகுப்பு வரை படித்தேன். நான் மல்லநாயக்கன்பட்டியில 5ம் வகுப்பு வரை படித்தேன் என்பதை எடுத்துரைக்க ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. சுமார் 15, 20 வருடத்திற்கு முன்பு என் தந்தையார் காலமாகிவிட்டார். என் தந்தையார் காலமான பிறகு நான் மல்லநாயக்கன்பட்டி வந்ததாக வழக்குரையில் சொல்லியிருந்தார் அது தவறு. என்னுடைய மனைவிக்கு 3 பிள்ளைகள். அவர்கள் முறையே குமார், ராஜேந்திரன், தனலெட்சுமி. தனலெட்சுமிக்கு, தங்கபாண்டியை திருமணம் செய்து கொடுக்கப்பட்டது. மேற்படி தங்கப்பாண்டி இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி. தனலெட்சுமி, தங்கப்பாண்டிக்கு 3 பிள்ளைகள். அந்த பிள்ளைகளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. மல்லநாயக்கன்பட்டியில் நான் குடியிருக்கிறேன் என்பதை எடுத்துரைக்க குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் கார்டு ஆகியவை எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. ஆண்டிமுத்துநாயக்கர் சுமார் 30 வருடத்திற்கு முன்பு காலமானார். சொத்தை குடும்பத்தின் மூத்தவர் தான் நிர்வாகம் செய்து வந்தார். ஆண்டிமுத்துநாயக்கருக்கு அடுத்த சகோதரர் பெரியமாதாநாயக்கர். பெரியமாதாநாயக்கர் சுமார் 7,8 வருடங்குள்கு முன்பு காலமாகிவிட்டார். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பெரியமாதாநாயக்கர் காலமாகிவிட்டார். தாவா சொத்தில் சின்னமாதாநாயக்கர் வீடுகட்டி குடியிருந்து வருகிறார். அந்த வீட்டை சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு கட்டினார். வீடுகட்ட பணத்தை சின்னமாதாநாயக்கரின் மச்சுனர்கள் கொடுத்து உதவி செய்தார்கள். அந்த வீடுகட்டப்பட்ட இடம் பிரிவினையாகாத இடமாகும். பெரியமாதாநாயக்கர் காலமான பிறகு குடும்பத்தின் மூத்தவர் என்ற அடிப்படையில் வாதி சின்னமாதாநாயக்கர் சொத்தை நிர்வாகம் செய்துவந்தார் என்று சொன்னால் சரிதான். இதே சொத்து சம்மந்தமாக 2ம் பிரதிவாதி அவரது தாயார் மூலமாக நோட்டீஸ் அனுப்பி ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்த விபரம் எதுவும் எனக்கு தெரியாது. பெரியமாதாநாயக்கர் பெயரிலும், என்னுடைய அக்கா 1ம் பிரதிவாதியான பொம்முத்ததாய் பெயரிலும் சொத்துகள் வாங்கப்பட்ட விபரம் எனக்கு தெரியும்.

அந்த சொத்துகள் யாரிடமிருந்து வாங்கப்பட்டது, எவ்வளவுக்கு வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த சொத்துகள் 2ம் பிரதிவாதியின் பொறுப்பில் உள்ளது. பெரியமாதாநாக்கரிடமிருந்து ஒரு பங்கை 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியாது. சிலசொத்துகளுக்கு பெரியமாதாநாயக்கர், சின்னமாதாநாயக்கர் மற்றும் ஆண்டிமுத்துநாயக்கர் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டாவாகவும், சில சொத்துக்களுக்கு தனித்தனி பட்டாவாகவும், உள்ள விபரம் எனக்கு தெரியும். ஆண்டிமுத்துநாயக்கரை பார்த்துள்ளேன். ஆண்டிமுத்துநாயக்கர் அந்த காலத்தில் புளியமரங்களை குத்தகைக்கு எடுத்தும், விவசாய நிலங்களை குத்தகை எடுத்தும் வருமாணம் ஈட்டிவந்தார் என்று சொன்னால் சரியல்ல. பொதுக்குடும்பத்திற்கு என்ன வருமானம், என்ன செலவு, என்ன மிச்சம்யிருந்தது என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மனைவி இறக்கும் தருவாயில் அவருடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் இல்லை. ஆகவே நான் மாமனார் வீட்டிலிருந்தேன். அவர்கள் தான் எனக்கு சாப்பாடு கொடுத்து வந்தார்கள். சின்னமாதாநாயக்கருக்கு மாரிஸ்வரி என்ற மனைவி இருந்தார். மாரிஸ்வரி எனக்கு அண்ணன் மகள். நான் தற்பொழுதும் சின்னமாதாநாயக்கர் பாதுகாப்பில் தான் உள்ளேன். சீனியம்மாள் என்ற மனைவி எனக்கு உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சீனியம்மாள் என் அண்ணன் மனைவி. நான் சீனியம்மாளுடன் சேர்ந்து வசித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மல்லநாயக்கன்பட்டியில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தங்கப்பாண்டியுடன் எனக்கு பேச்சுவார்த்தை உள்ளது. ஆனால் இன்றைய தினம் நான் தங்கப்பாண்டியுடன் பேசவில்லை. நான் சீனியம்மாளுடன் தொடர்பு வைத்துள்ளேன் என்றும், ஆகவே 2ம் பிரதிவாதி என்னுடன் பேச்சுவார்த்தை எதுவும் வைத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய குழந்தைகள் வேறு ஒரு தனி வீட்டில் வசித்து வருகிறார்கள். சின்னமாதாநாயக்கர் தூண்டுதல் காரணமாக 1 முதல் 3 , 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மொத்தம் எத்தனை இலக்க சொத்துகளுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் வழக்குரையை படித்து பார்க்கவில்லை. சின்னமாதாநாயக்கர் சொன்னதன் அடிப்படையில் தான் என்னுடைய முதல் விசாரணை தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2023.02.14 16:22:10 +0530

Additional District Judge,

Dindigul.